பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
28 11 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- இந்தியா – பிரான்ஸ் இடையேயான உறவு வலுப்பெறுவதற்கு வர்த்தகம், முதலீடுகள், தொழில்நுட்பம் உள்ளிட்டவை முக்கிய காரணிகளாக உள்ளன என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- இந்தியாவின் வானிலையை துல்லியமாக வழங்குவதற்கு டாப்ளர் வானிலை ரேடார்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் விரைவில் நிறுவப்படும் என்று மத்தியஇணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.
- ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சராக திரு ஹேமந்த் சோரன் இன்று மீண்டும் பதவியேற்கிறார்.
- காஸாவில் போர் நிறுத்தம் கொண்டு வருவதற்காக துருக்கி, எகிப்து, கத்தார் மற்றும் இஸ்ரேல் நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.
- ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - ஜப்பானை எதிர்கொள்கிறது

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

இந்தியா – பிரான்ஸ் இடையேயான உறவு வலுப்பெறுவதற்கு வர்த்தகம், முதலீடுகள், தொழில்நுட்பம் ஆகியவை முக்கிய காரணிகளாக உள்ளன என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஆசிய பசிபிக் பகுதிகளுக்கான பிரான்ஸ் வெளியுறவு வர்த்தக ஆணையர்களின் ஆண்டு கூட்டத்தில் பிரதமரின் உரையை மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் வாசித்தார்.

இந்த கூட்டத்தில் உரையாற்றிய திரு பியூஷ் கோயல், இந்தியா – பிரான்ஸ் நாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் நடப்பு நிதியாண்டில் 15 பில்லியன் டாலர் அளவை எட்டியுள்ளதாக தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு அதிகரித்து வருவதாகவும், தொழில்நுட்ப ஒத்துழைப்பு வலுப்பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

பருவ நிலை மாற்றம் உள்ளிட்ட சவாலான விஷயங்களில் இரு நாடுகளும் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான கலாச்சாரம் மற்றும் கல்வி துறையில் பரிமாற்றங்கள் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயம், உணவு பதப்படுத்துதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, விண்வெளி, பாதுகாப்புத்துறை, வாகன உதிரிப் பாகங்கள், மின்சார வாகனங்கள், மின்னணு தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பு வலுப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவும், பிரான்ஸும் இணைந்து போர் விமானங்கள் தயாரிப்பு, சைபர் குற்றங்களை குறைப்பது, செயற்கை நுண்ணறிவு, மின்னணு வர்த்தகம், குவாண்டம் தொழில்நுட்பம் ஆகியவற்றில் இணைந்து செயல்படுவது குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

பின்னர் தொழில்துறையினரையும் சந்தித்து இந்தியா – பிரான்ஸ் இடையேயான வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்து திரு பியூஷ் கோயல் விரிவாக விவாதித்தார்.

**[]<<<>>>[]**

இந்தியாவின் வானிலை அறிக்கைகளை துல்லியமாக வழங்குவதற்கு 87 டாப்ளர் வானிலை ரேடார்கள் விரைவில் நிறுவப்படும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

வானிலை இயக்கம் என்ற திட்டத்தின் கீழ் நாட்டின் வானிலை முன்னறிவிப்பின் துல்லியத்தை மேம்படுத்துவதற்காக இந்த டாப்ளர் ரேடார்கள் வாங்கப்படும் என்று மக்களவையில் அவர் எழுத்துப்பூர்வமாக அளித்துள்ள பதிலில் கூறியுள்ளார்.

இந்த ரேடார்கள் மூலம் அதிகமாக மழைப்பொழிவு இருக்கும் இடங்கள், மிகக்குறுகிய காலத்தில் பெய்யக்கூடிய கனமழை மற்றும் பத்து நிமிடங்களுக்கு ஒரு முறை வான் மேகங்களின் நகர்வுகளை படமெடுத்து வழங்கும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த டாப்ளர் ரேடார்கள் அடுத்த மூன்று ஆண்டுகளில் நாட்டின் பல்வேறு இடங்களில் நிறுவப்படும் என்றும் திரு ஜிதேந்திரசிங் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

விவசாயிகளுக்குத் தேவையான டி ஏ பி எனப்படும் டை அமோனியம் பாஸ்பேட் உரம் எவ்வித தட்டுபாடுமின்றி கிடைப்பதற்கு மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அக்டோபர் நவம்பர் மாதங்களில் இதுவரை பதினேழு லட்சம் டன் உரம் மாநிலங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஆறரை லட்சம டன் உரமும் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

இதுவரை மொத்தம் 34 புள்ளி எட்டு ஒன்று லட்சம் மெட்ரிக் டன் உரம் மாநிலங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சராக திரு ஹேமந்த் சோரன் இன்று மீண்டும் பதவியேற்கிறார்.

ராஞ்சியில் இன்று மாலை நான்கு மணி அளவில் நடைபெறும் நிகழ்ச்சியில் அம்மாநில ஆளுநர் திரு சந்தோஷ் குமார் கங்குவார் அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்குமாறு பிரதமர் திரு நரேந்திரமோடி, உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா மற்றும் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக திரு ஹேமந்த் சோரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜூன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

அண்மையில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா – காங்கிரஸ் கூட்டணி அதிக இடங்களில் வெற்றிபெற்று ஆட்சியை தக்க வைத்துக் கொண்டது.

[]<<<>>>[]

பாதுகாப்புத்துறையும், தொழில் துறையும் இணைந்து நடத்தும் இரண்டு நாள் கூட்டம் புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

இதில் 200-க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

ராணுவ உயரதிகாரிகள் 100 பேர் இதில் கலந்து கொள்கின்றனர்.

பாதுகாப்புத்துறையில் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துவது மற்றும் ராணுவத்துக்கு தேவையான தளவாடங்களை கொள்முதல் செய்வது உள்ளிட்டவை குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்படுகிறது.

**[]<<<>>>[]**

தமிழகத்தின் உதகை வந்துள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று குன்னூர் வெலிங்டன் ராணுவ அதிகாரிகளின் பயிற்சி கல்லூரியில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றுகிறார்.

வெலிங்டன் ராணுவ பயிற்சி கல்லூரி வளாகத்தில் உள்ள போர் நினைவு சின்னத்தில் மலர் வளையம் வைத்து அவர் மரியாதை செலுத்துகிறார்.

இதையடுத்து அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, போக்குவரத்திலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நாளை மறுநாள் திருவாரூர் மத்திய பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் குடியரத் தலைவர் பங்கேற்க உள்ளதை அடுத்து, அம்மாவட்டத்தில் எந்த ஒரு பகுதியிலும் ட்ரோன் கேமராக்கள் பறக்க விடுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளதாக அம்மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

கடலோர காவல்படையின் 11-வது தேசிய தேடுதல் மற்றும் மீட்புப் பணி தொடர்பான ஒத்திகை பயிற்சி இன்று கொச்சியில் நடைபெறுகிறது,.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த பயிற்சியை பாதுகாப்புத்ததுறை செயலாளர் திரு ராஜேஷ்குமார் சிங் தொடங்கி வைக்கிறார்.

தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் மண்டல அளவிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது இந்த பயிற்சியின் முக்கிய அம்சமாக திகழ்கிறது.

இந்திய கடலோர பகுதிகளில் பாதுகாப்பை வலுப்படுத்துவதுடன், கடலோர காவல்படையின் திறன்களை மேம்படுத்தவும் இந்த பயிற்சி வழிவகுக்கும் என்று பாதுகாப்புத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுமண்டலம் அதே இடத்தில் நிலை கொண்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது அடுத்த 12 மணி நேரத்தில் புயலாக மாறுவதற்கு வாய்ப்பு உள்ளதாகவும் அது கூறியுள்ளது.

இதன் பின்னர் வடக்கு வடமேற்கு திசையில் நகர்ந்து காரைக்காலுக்கும் - மகாபலிபுரத்துக்கும் இடையே காற்றழுத்த தாழ்வுமண்டலமாக விழவிழந்து கரையை கடக்கக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுமண்டல் நாகப்பட்டினத்திலிருந்து தென்கிழக்கே 320 கிலோமீட்டர் தொலைவிலும், புதுச்சேரியிலிருந்து 410 கிலோ மீட்டர் தூரத்திலும், சென்னையிலிருந்து 490 கிலோமீட்டர் தொலைவிலும் நிலை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் திரிகோணமலையின் கிழக்கு வடகிழக்கே 100 கிலோ மீட்டர் தொலைவில் மையம் கொண்டுள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் கன முதல் மிக கனமழைக் கூடும் என்றும் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் காரைக்கால் ஆகிய பகுதிகளில் ஒரு சில இடங்களில் கன மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளையும், நாளை மறுநாளும் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் அதி கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

கடல் பகுதியில் காற்றின் வேகம் மணிக்கு 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**[]<<<>>>[]**

காஸாவில் போர் நிறுத்தம் கொண்டு வருவதற்காக துருக்கி, எகிப்து, கத்தார் மற்றும் இஸ்ரேல் நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

ஹெஸ்புல்லா அமைப்பினருக்கும், இஸ்ரேலுக்கும் இடையே போர் நிறுத்தம் ஒப்பந்தம் லெபனானில் எட்டப்பட்டதை அடுத்து திரு ஜோ பைடன் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

காஸாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்படும் பட்சத்தில் அங்குள்ள ஹமாஸ் அமைப்பிடம் பிணைக் கைதிகளைகளை விடுவிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளர்.

இதற்கிடையே இஸ்ரேலுக்கும் - லெபனானுக்கும் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் அமைப்பினர் வரவேற்றுள்ளனர்.

இதுவரை காஸா பகுதியில் 44 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதாகவும், ஒரு லட்சத்து நான்காயிரம் பேர் காயமடைந்துள்ளதாகவும் ஹமாஸ் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - ஜப்பானை எதிர்கொள்கிறது.

மஸ்கட்டில் இப்போட்டி இரவு மணி 8-30-க்கு தொடங்குகிறது.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா 11-0 என்ற கோல் கணக்கில் தாய்லாந்தை வென்றது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களுரு அணி இரண்டுக்கு – ஒன்று என்ற கோல் கணக்கில் கொல்கத்தா அணியை வென்றது.

இன்று கொச்சியில் நடைபெறும் ஆட்டத்தில் கேரளா அணி – கோவா அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

ப்ரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஹரியானா அணி, புனே அணியை 38-28 என்ற புள்ளி கணக்கில் வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் குஜராத் அணி 39-37 என்ற புள்ளி கணக்கில் மேற்குவங்க அணியை வென்றது,

இன்று நடைபெறும் ஆட்டங்களில் உத்திரபிரதேச அணி – ராஜஸ்தான் அணியையும், மும்பை அணி – தெலுகு அணியையும் எதிர்கொள்கின்றன.

[]<<<>>>[]